DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.136/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சதிஷ்குமார் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | முனியப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026.
1 , 2, மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் மேட்டுத்திருக்காம்புலியுரில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விக்னேஷ்வரன், பட்டியல் சாட்சி ஜீவாவைத் தெரியும். ஆஜர் 1, 2, 4 எதிரிகளைத் தெரியாது. 3ம் எதிரி சபரிநாதனையும் தெரியாது. 13.09.2025 ம் தேதி நான் சித்தலவாயிலிருந்து மேட்டுத்திருக்காம்புலியூருக்கு இருசக்கர வாகனத்தில் இரவு 07.30 மணிக்கு வந்து கொண்டிருந்தேன் . அங்கு கூட்டமாக இருந்தது அங்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. எனக்கு எதுவும் காயம் இல்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 13.09.2023ம் தேதி 08.30 மணியளவில் மேட்டுத்திருக்காம்புலியூர் வாய்க்கால் பாலம் அருகே வரும் போது 1ம் எதிரி கவிதாஸ் அ.சா.1ஐ அசிங்கமாகத் திட்டி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. பின்னிட்டு

13.09.2023 ம் தேதி 21.00 மணியளவில் திருக்காம்புலியூர் பஸ் ஸ்டாப் அருகே 1 முதல் 4 எதிரிகள் சதிஷ்குமார்,. ஜீவா, பாரதி, மற்றும் அ.சா.1 ஐ வழிமறித்தார்கள் என்றால் சரியல்ல. 3 ம் எதிரி சபரிநாதன். 4 ம் எதிரி திவாகர் ஆகீயோர்கள் தேவடியா பயலே என்று திட்டினார்கள் என்றால் சரியல்ல.

2. கவிதாஸ் கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1 ஐ வலது கெண்டைக்கால் இடதுகால் முட்டி ஆகியவற்றில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இதைத்தடுக்க வந்த என்னை இடது உள்ளங்கையில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சாட்சி ஜீவாவை வலதுகை மணிக்கட்டு, வலது முழங்கை, வலது கால் முட்டி, இடது கால் முட்டி ஆகீயவற்றில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

3. அங்கிருந்தவர்கள் ஒடிவரவே நான்கு எதிரிகளுழ இன்னிக்கு தப்பித்து விட்டிர்கள் என்னைக்கிருந்தாலும் எங்களை கொல்லாமல் விடமாட்டோபம் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை நேரில் பார்த்து போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு எதிரிகளுடன் சமாதானம் ஆகி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கைியெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.22 10:32:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.